**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.B.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 07 ம் நாள் செவ்வாய்கிழமை

**மேல்முறையீட்டு வழக்கு எண்.29/2023**

**(வள்ளியூர் சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.66/2014)**

**(CNR NO.TNTL27-000619-2023)**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.29/2023**

1) C. பார்வதி (இறப்பு) * ... மேல்முறையீட்டாளர்/1 ம் பிரதிவாதி

2) வெள்ளபாண்டி

3) கல்யாணி

4) லதா

5) அழகுரதி ... 2 முதல் 5 மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

* *(இ.ம.எண்.1/2026 ல் 02.07.2026 ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)*

// எதிர் //

1) R. குரு சங்கரநாராயணன் ... எதிர்மேல்முறையீட்டாளர்/ வாதி

2) K. பாண்டி ... எதிர்மேல்முறையீட்டாளர்/ 2 ம் பிரதிவாதி

இந்த மேல்முறையீடானது, நான்குநேரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண்.249/2009-ல், 05.06.2014 ம் தேதியிட்டு வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:32:22 +0530

**<u>விசாரணை நீதிமன்ற தரப்பினர் விவரம்</u>**

R. குரு சங்கரநாராயணன் ... வாதி

// எதிர் //

1) C. பார்வதி

2) K. பாண்டி ...பிரதிவாதிகள்

இந்த வழக்கானது முதலில் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் மே.வ.எண்.66/2014 என தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்னர், மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் மே.வ.எண்.29/2023 என எண்ணிடப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கானது, என் முன்பு இறுதியாக 06.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது, மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. டைட்டஸ் ஏனோக் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.S. ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாத உரைகளைக் கேட்டும், விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், இதுநாள்வரை என் ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ....

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:32:34 +0530

**<u>தீர்ப்புரை</u>**

இந்த மேல்முறையீட்டு வழக்கானது 05.06.2014 ம் தேதியன்று, அ.வ.எண்.249/2009 ல், நான்குநேரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 96 கட்டளை 41 விதி 1 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>அசல் வழக்கு எண்.249/2009-ல் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u> :-**

தபசில் சொத்து ஆதியில் வெங்கடாச்சல ரெட்டியார் குமாரர் ஆர்.வி.சங்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. ஆர்.வி.சங்கரன் என்பவரிடமிருந்து இந்த வாதியின் தகப்பனார் எம்.ஆர்.எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் 25.04.1997 ல் தக்க பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்றுள்ளார். தபசில் சொத்தில் கிரைய காலம் முதல் வாதியின் தகப்பனார் மின் மோட்டார் மூலம் விவசாயம் செய்து அனுபவித்து வந்தார். பிராது தபசில் சொத்தின் பட்டா இந்த வாதியின் தகப்பனார் பெயரில் ஏற்பட்டு பட்டா சகிதம் தீர்வை செலுத்தி தனித்த சுவான்தார் நிலமையில் வாதியின் தகப்பனார் அனுபவித்து வந்தார். வாதியின் தகப்பனார் எம்.ஆர்.எஸ்.இராமகிருஷ்ணன் 03.09.2004 ல் காலம் சென்றுவிட்டார். மேற்படி இராமகிருஷ்ணன் அவர்களுக்கு இந்த வாதி மட்டுமே ஒரே ஆண் வாரிசு. வாதியின் தகப்பனார் காலம் சென்றபின் 2005 ம் வருடம் ஜனவரி மாத இறுதியில் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தபசில் சொத்தும், வேறு சொத்துக்களும், வாதியின் பாகத்திற்கு



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:32:40 +0530

ஒதுக்கீடு செய்யப்பட்டு, தபசில் சொத்து வாதியின் தனித்த சுவாதீனத்திலும், ஆளுகையிலும், அனுபோகத்திலும் உள்ளது. தபசில் சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு யாதொரு உரிமையோ, பாகமோ, பாத்தியதையோ, அனுபோகமோ கிடையாது. தபசில் சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் அன்னியர்கள். வாதி கடந்த 21.11.2009 ல் தபசில் சொத்தில் இருக்கும் போது பிரதிவாதிகள் தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதியின் அமைதியான அனுபவத்தை இடைஞ்சல் செய்ய எத்தனித்தார்கள். அதை பக்கத்தில் உள்ள பெரியவர்கள் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது. பிரதிவாதிகள் இந்த வாதியை தபசில் சொத்துக்களை அமைதியாக அனுபவிக்க விடமாட்டோம் என ஊரில் பிரஸ்தாபித்து வருகிறார்கள். எனவே தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யாமல் பிரதிவாதிகளை தடுத்து நிறுத்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) <u>1 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>

பிராது சங்கதிகள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் உயிருடன் இருந்த காலத்தில் பிராது சொத்தின் சுவான்தார் சங்கரன் என்பவரால் 1ம் பிரதிவாதிக்கு பிராது சொத்து கூட்டு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. 1ம் பிரதிவாதி ஒரு குருணிக்கு ரூ.200/- பாட்டம் கொடுத்து வந்தார். தொடர்ந்து மேற்படி சங்கரன் 1ம் பிரதிவாதிக்கு பிராது சொத்தை கிரையம் பேசினார். 1ம் பிரதிவாதி, மேற்படி சங்கரனுக்கு, நல்லக்கண்ணு



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:32:48 +0530

கோனாரிடமிருந்து அடமானத்தை மீட்க ரூ.30,000/- கொடுத்தார். மேற்படி சங்கரன் முழு கிரைய தொகைக்கு ரூ.52,000/- கேட்டார். 1ம் பிரதிவாதி, ராஜா பண்ணையாரிடம் வட்டிக்கு வாங்கி மேற்படி சங்கரனிடம் ரூ.52,000/- கொடுத்தார். இந்நிலையில் சங்கரன் கிரைய பத்திரம் முடித்து தர காலம் தாழ்த்தி வந்தார். எனவே 1ம் பிரதிவாதி 24.06.1997 ல் மேற்படி சங்கரனுக்கு கடிதம் ஒன்றை பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பினார். மேற்படி சங்கரன் சான்றதிழ் அஞ்சலை பெற்றுக் கொண்டார். ஆனால் வேண்டுமென்றே பதிவு தபாலை வாங்காமல் மறுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி நேரடியாக பிராது சொத்தை கட்டுக்குத்தகைதாரராகவும், பின்னர் சுவான்தார் நிலையிலும் இணைந்து அனுபவம் செய்து வருகிறார். அதற்கு தீர்வையும் செலுத்தியுள்ளார். 08.08.2002 ல் கிராம நிர்வாக அதிகாரி, 1ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தை பருவம் செய்வதை சான்று செய்துள்ளார். 19.03.2003 ல் கிராம நிர்வாக அதிகாரி பிராது சொத்தை பருவம் செய்தது குறித்து பயிரெடுப்பு கணக்கு அடங்கல் தந்துள்ளார். 25.09.2003 ல் 1ம் பிரதிவாதி, தினத்தந்தி நாளிதழில் 3ம் தரப்பினர் கிரையம் பெறக்கூடாது என எச்சரித்து விளம்பரம் கொடுத்தார். 1ம் பிரதிவாதி கட்டுக்குத்தகை உரிமை சுவான்தார் உரிமையோடு இணைந்துள்ளது. எனவே வாதி விளம்புகை சுவாதீன பரிகாரம் கோராமல் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. எனவே வாதியின் தாவா வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:32:55 +0530

**4) <u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கீழ்க்கண்டவாறு மாற்றி எழுவினாக்கள் வனையப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது :</u>**

1. தபசில் சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளதா ?
2. விளம்புகை மற்றும் சொத்தினை ஒப்படைப்பு செய்யக் கோரும் பரிகாரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதா ?
3. வாதிக்கு பிராதில் கோரிய படி உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வாதிக்கு கிடைக்கக் கூடிய பரிகாரங்கள் என்னென்ன?

**5)** விசாரணை நீதிமன்றத்தில், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில், வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், பி.சா.1 முதல் பி.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6)** விசாரணை நீதிமன்றத்தால் வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதியால் இந்த மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டு வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்களோ அவ்வாறே அழைக்கப்படுவார்கள்.



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:33:05 +0530

**7) மேல்முறையீட்டிற்கான காரணங்கள் :-**

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் மாறானது. கீழமை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் சட்டத்தவறும், பொருண்மை தவறும் உள்ளது. விசாரணை நீதிமன்றம் பி.சா.1 முதல் பி.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை சரியாக பரிசீலனை செய்யவில்லை. 1ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களான பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை சரியாக கருத்திற் கொள்ளவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை தவறாக கருத்திற்கொண்டு வாதியின் வழக்கை அனுமதித்தது சட்டப்படி ஏற்புடையதல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் சட்டத்திற்கு புறம்பான ஆவணமாகும். விசாரணை நீதிமன்றம் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை கருத்திற்கொண்டு ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே இந்த மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**8) இந்த மேல்முறையீட்டு வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் :**

1. வாதி கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. அசல் வழக்கு எண்.249/2009 ல் 05.06.2014 ல் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கக்கூடியதா?



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:33:33 +0530

**9)** <u>**பிரச்சனை எண்.1 மற்றும் 2 ற்கான தீர்வு**</u>

அசல் வழக்கானது, எதிர்மேல்முறையீட்டாளர்/வாதியால் வழக்குரை சொத்து பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மேல்முறையீட்டின் குறிப்பாணையில், விசாரணை நீதிமன்றம் பி.சா.1 முதல் பி.சா.4 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை சரியாக பரிசீலனை செய்யவில்லை. 1ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை சரியாக கருத்திற் கொள்ளவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை தவறாக கருத்திற்கொண்டு வாதியின் வழக்கை அனுமதித்தது சட்டப்படி ஏற்புடையதல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் சட்டத்திற்கு புறம்பான ஆவணமாகும். விசாரணை நீதிமன்றம் வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை கருத்திற்கொண்டு ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, இந்த மேல்முறையீடு அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

**10)** அடுத்ததாக, விசாரணை நீதிமன்றத்தில் வாதி, வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், ஆதியில் தபசில் சொத்து சங்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன்பின்பு சங்கரன் என்பவரிடமிருந்து வாதியின் தகப்பனார் 25.04.1997 ல் கிரையம் பெற்றார். வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு அனுபவம் செய்து வந்தார். வாதியின்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:33:40 +0530

தகப்பனார் 03.09.2004 ல் காலம் சென்றுவிட்டார். இந்த வாதி, வாதியின் தகப்பனாருக்கு ஒரே வாரிசு ஆவார். வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்தை பொறுத்தவரையில் பிரதிவாதிகள் 3ம் தரப்பினர்கள். வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்கிறார்கள். எனவே உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

**11)** அடுத்ததாக, வாதி தன்னுடைய சாட்சியத்தில், வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிரைய பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள பட்டா வா.சா.ஆ.2 ஆகவும், வாதியின் தகப்பனாரின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.3 ஆகவும், தபசில் சொத்திற்குரிய வரிவிதிப்பு ரசீதுகள் வா.சா.ஆ.4 ஆகவும், தபசில் சொத்திற்குரிய அடங்கல் பதிவேடுகள் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக, 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், வாதியின் தகப்பனார் சரியான பிரதிபலனுக்காக தாவா சொத்தை கிரையம் வாங்கவில்லை. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை. 2ம் பிரதிவாதியின் கணவர் வழக்குரை சொத்தில் குத்தகைக்கு அனுபவத்தில் இருந்தார். புல வகைக்கான குத்தகை சொத்தின் உரிமையாளருக்கு கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சொத்தின் உரிமையாளர் ரூ.30,000/- பிரதிவாதியின் கணவரிடமிருந்து வாங்கி கொண்டார். அதன்பிறகு ரூ.52,000/-த்திற்கு



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:33:49 +0530

தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார். அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதாகும்.

**12)** அடுத்ததாக, வழக்குரை சொத்தில் இந்த பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் கணவர் குத்தகைதாரராக இருந்தார்களா? அதனடிப்படையில் தாவா சொத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார்களா? என்பதை பொறுத்து வாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது, வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **“ஆர்.வி.சங்கரன் என்ற என் அப்பாவின் கிரயதாரர் மதுரை, காமராஜர் தெரு, கே.கே. நகரில் குடியிருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆர்.வி.சங்கரன் என் அப்பாவின் கிரயதாரர் எந்த ஊரில் வியாபாரம் செய்து வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ....... 1997 ல் பிரதிவாதி பார்வதி, ஆர்.வி.சங்கரன் என் அப்பாவின் முன்சுவான்தாரருக்கு ஏற்கனவே பெற்றுக் கொண்ட கிரய தொகைக்கு கிரய பத்திரம் எழுதி தரக்கேட்டு ஒரு பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் ஒரு கடிதம் எழுதியுள்ளதாக எதிர்வழக்குரையில் கட்சி செய்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா வழக்கு சொத்தினை கிரயம் வாங்கிய காலத்தில் பட்டா எண்.419 என்றால் எனக்கு தெரியவில்லை. ஆர்.வி.சங்கரன் என்ற என் அப்பாவின் முன்சுவான்தாரர் எந்த ஊரில் தொழில் நிமித்தமாக குடியிருந்தார் என்றால் பல ஊர்களில் குடியிருந்தார். அவர் தொழில் நிமித்தமாக சுமார் 50 ஆண்டு காலம் வெளியூர்களில் குடியிருந்தார். அவர் வெளியூரில் இருந்து வந்த காலத்தில் தபசில் சொத்தில் விவசாயம் நடைபெற்று வந்தது என்றால் சரிதான். என் அப்பா கிரயம் வாங்கும் முன்பு**



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:33:57 +0530

**தபசில் சொத்தில் நாங்கள் விவசாயம் எதுவும் செய்யவில்லை. நாங்கள் கிரயம் பெறும் முன்பு தபசில் சொத்தில் யார் பயிர் செய்து வந்தார்கள் என்றால் ஆர்.வி.சங்ரகனின் அண்ணன் யாரோ பயிர் செய்து வந்தார்.''** என சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தினை கவனத்தில் கொள்ளும்போது, வழக்குரை சொத்து ஆர்.வி.சங்கரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆர்.வி.சங்கரன் என்பவர் வழக்குரை சொத்தை வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாக இந்த பிரதிவாதிகள் வழக்குரை சொத்தில் குத்தகைதாரராக இருந்துள்ளார்கள் என்பதும், ஆர்.வி.சங்கரன் வழக்குரை சொத்தை 15.09.1993 ல் பத்திர எண்.1176/93 ன் படி அடமானம் வைத்து செல்லடித்துவிட்டார். மேற்படி செல்லடித்து வைத்ததற்கான ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்யும் போது, ரூ.30,000/-த்திற்கு அடமானம் வைத்த தபசில் சொத்தை சொத்தின் உரிமையாளரான சங்கரன் மீட்டதாக தெரிய வருகிறது. மேற்படி பி.சா.ஆ.1 அடமானத்தை செல்லடித்தது சம்பந்தமாக 1ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யும் போது, பி.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **"சுமார் 25 வருடங்களாக குடியிருக்கிறேன். வாதி குருசங்கரன் வாதியை தெரியும். அவருக்கு கிரயம் கொடுத்த சங்கரன் பண்ணையாரை தெரியும். ராமகிருஷ்ணாபுரத்தில் தான் சங்கரன் பண்ணையார் குடியிருந்தார். அவரிடம் கூட்டுக்குத்தகைக்கு 1 ஆண்டு விவசாயம் பார்த்தேன். அது எந்த ஆண்டு என தெரியவில்லை. நான் பயிரிடும் சம்சாரியாக தாலுகா**



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:34:06 +0530

**அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறேன்.**" என சாட்சியமளித்துள்ளதை பார்க்கும் போது, மேற்படி பி.சா.ஆ.1 குத்தகை பத்திரத்தின் அடிப்படையில் ஓராண்டு 1ம் பிரதிவாதி விவசாயம் செய்துள்ளார். அதனை தொடர்ந்து விவசாயம் பார்த்தற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. மேலும், சங்கரன், வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளார்.

**13)** அடுத்ததாக, 1ம் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4 கடிதங்களை பரிசீலனை செய்யும் போது, 1ம் பிரதிவாதியான பார்வதி, தாவா சொத்தின் முன் உரிமையாளரான சங்கரன் என்பவரிடம் சொத்தை கிரையம் பேசியதாகதான் தெரிய வருகிறது. ஆகவே தாவா சொத்தை சங்கரன் என்பவர் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்படவில்லை. வாதியின் தகப்பனாருக்கு தான் அதன் உரிமையாளரால் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தரப்பில், வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் போலியானது என எதிர்வாதம் செய்வதோடு தன்னுடைய கடமை முடிந்ததாக கருத முடியாது. பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது இந்த பிரதிவாதியின் சுமையாகும். ஆகவே மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி, விசாரணை நீதிமன்றம் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை கருத்திற்கொண்ட விதம் ஏற்புடையதல்ல என கூறும் குறைபாடு ஏற்புடையதல்ல. தபசில் சொத்தை வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற பிறகு வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வா.சா.ஆ.2 ஆவணமும், வாதியின் தகப்பனார் 03.09.2004 ல்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:34:12 +0530

இறந்துவிட்டதாக வா.சா.ஆ.3 ஆவணமும், வழக்குரை சொத்திற்கு ஏற்பட்ட தீர்வை ரசீது வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளதாக வா.சா.ஆ.4 ஆவணமும், அதனை தொடர்ந்து தாவா சொத்திற்குரிய அடங்கல் பதிவேடு வாதியின் தகப்பனார் பெயரில் உள்ளதாக வா.சா.ஆ.5 ஆவணமும் காணப்படுகிறது. ஆகவே வாதி, இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கேட்டிருப்பது ஏற்புடையது. விசாரணை நீதிமன்றமானது வா.சா.ஆ.1 ஆவணத்தை கருத்திற்கொண்டும், அதனை தொடர்ந்து வருவாய் ஆவணங்களை கருத்திற்கொண்டும், தபசில் சொத்து வாதியின் அனுபவத்தில் இருக்கிறது என தீர்மானித்து பிரதிவாதிகளுக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் ஏற்புடையது. பிரதிவாதிகள் மேல்முறையீட்டில் கூறியுள்ள குறைபாடுகள் ஏற்புடையதல்ல. ஆகவே கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய எந்த முகாந்திரமும் இல்லை. எனவே கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்வு சரியானது என்றும் மேற்படி தீர்வில் தலையீடு செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு போதிய முகாந்திரம் இல்லை என்றும் இப்பிரச்சனைகளுக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே இந்த மேல்முறையீடு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

**14)** முடிவாக, இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அசல் வழக்கு எண்.249/2009-ல், நான்குநேரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:34:21 +0530

05.06.2014 ம் தேதியில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 07 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:34:30 +0530

சார்பு நீதிபதி,

நான்குநேரி

**சாட்சி விபரங்கள்** : -

| | | |
|---|---|---|
| மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள் | - | இல்லை |
| மேல்முறையிட்டாளர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - | இல்லை |
| எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள் | - | இல்லை |
| எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - | இல்லை |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.10 18:34:36 +0530

சார்பு நீதிபதி,

நான்குநேரி

**நகல்**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி.

சார்பு நீதிமன்றம்

நான்குநேரி

மே.வ.ண்.29/2023

நேரிய/வரைவு தீர்ப்புரை

நாள் -07.07.2026